**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.2**
**OS.NO.129/2019**

| | | |
|---|---|---|
| **NAME** | : | வேல்முருகன் (எ) சேட்டு |
| **FATHER NAME** | : | |
| **VILLAGE** | : | |
| **TALUK** | : | |
| **CALLING** | : | |
| **RELIGION** | : | |
| **AGE** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 13.02.2023.**

<u>குறுக்கு விசாரணை</u>

கோவிந்தசாமி எனக்கு தூரத்து உறவு. என் சகோதரியின் பெயர் வளர்மதி. என் சகோதரியின் கணவர் பெயரும் கோவிந்தசாமிதான். வளர்மதியுடன் எனக்கு பேச்சுவார்த்தை உண்டு. நாங்கள் ஒரே ஊரில்தான் இருக்கிறோம். வழக்கு சொத்து வல்லண்டிரம் என்ற ஊரில் உள்ளது. வழக்கு போட்டுள்ள சொத்து கோவிந்தசாமியின் அப்பாவிற்கு முழு உரிமையான சொத்து என்றால் ஆமாம். அவர் 3 ஆண்பிள்ளைகளுக்கு சொத்தை பிரித்துக் கொடுத்துவிட்டார் என்றால் சரி. தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரி. அந்த 3 ஆண்பிள்ளைகள்தான் தானசெட்டில்மெண்ட் பத்திரம் முன்னிலைக்கு சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரி. தானசெட்டில்மெண்ட் பத்திரம் மொத்தம் பூங்கொடியிடம்தான் உள்ளது. தானசெட்டில்மெண்ட் பத்திரம் நடைமுறைக்கு வந்த காரணத்தால் வாதிகள் பாகம் கேட்க உரிமையில்லை என்றால் சரியல்ல. வாதிகளுக்கு குடும்ப நண்பர் என்பதால் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. (வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.